**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 284/2022**

**Dated:05.01.2026**
**Deposition of Witnesses for PW -4**

| பெயர் | : | திரு.நவநீதகிருஷ்ணன் | வயது | : | |
|---|---|---|---|---|---|
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**3,7 எதிரிகள் ஆஜர் 11வது எதிரி ஆஜர்படுத்தபட்டார்.மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை . மனுக்கள் தாக்கல் செய்து அனுமதிக்கபட்டது.இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verfied with their identity card.**
**Aathar card of the Witness verfied.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:-**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.05.2020 ம் தேதி ராமநாதபுர மாவட்ட தீவிர குற்ற தடுப்பு பிரிவு சார்பு ஆய்வாளராக இருந்த போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் பிரத்யேக Cell phone எண் 9489919722 எண்ணிற்க்கு வந்த அழைப்பில் இளையான்குடியிலிருந்து TN 63T9082 என்ற ஆட்டோவில் சட்ட விரோதமாக கடத்தல் சம்பவங்கள் தொண்டி வழியாக நடைபெற உள்ளதாக தகவல் கிடைத்ததன் பேரில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவின்பேரில் திருவாடனை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.புகழேந்திகணேஷ் அவர்கள் தலைமையில்

தனிப்பிரிபு காவல் ஆய்வாளர் ஜாண் பிரிட்டோ, சார்பு ஆய்வாளர்கள் செந்தில்குமார், திபாகர் , குவனேஷ்வரன் ஆகியோர் தலைமையில் நானும் ஒரு குழுவும், மற்றும் சார்புஆய்வாளர்கள் தங்க முனியசாமி, ஜேசுதாஸ், முத்து முனியசாமி, சதிஷ்குமார் ஆகியோர் தலைமையில் 8பேர் கொண்ட தனிப்படைகள் அமைத்து மேற்படி தகவல் தொடர்பாக RS மங்களம் தொண்டி, திருவாடனை பகுதிகளில் தனித்தனியாக காவல் ஆளினாகள் குழுவுடன் கண்காணித்து வந்தபோது மேற்படி காவல் கண்காணிப்பாளர் அவர்களின் மேற்படி பிரத்தேக எண்ணிற்கு TN63T9082 என்ற ஆட்டோவில் போதை பொருட்களை எடுத்துக்கொண்டு R.S மங்களம், திருவாடனை வழியாக தொண்டி சென்று கடல் மார்க்கமாக வீரசங்கிலிமடத்தை சேர்ந்த அஜ்மீர் என்பவருக்கு சொந்தமான வல்லம் என்ற நாட்டு விசைபடகில் இலங்கைக்கு கடத்திருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் 20.05.2020 ம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் கோவிந்தமங்கலம் to முப்பையூர் சாலையில் நான், சார்பு ஆய்வாளர்கள் திபாகர், செந்தில்குமார், குகனேஷ்வரன் ஆகியோர்கள் காவல் ஆளினர்களுடன் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டு இருந்த போது ஆனந்துாரில் இருந்து திருவாடணை நோக்கி செல்லும் சாலையின் கோவிந்தமங்களம் விலக்கு அருகே அந்த வழியாக வந்த TN63T9082 என்ற ஆட்டோவினை நிறுத்திய போது அதற்கு பின்னால் வந்த 2 இருசக்கர வாகனங்கள் ஆட்டோவை சோதனை செய்து கொண்டிருந்த போது அதன் பின்னால் வந்த TN63BD1471 என்ற பதிவெண் கொண்ட மஞ்சள் நிற TVS Scooty மற்றும் கறுப்பு நிற Pulsar இரு சக்கர வாகனத்தில் வந்தவர்கள் திரும்பி வாகனத்தில் திரும்பி செல்ல வண்டியில் ஓட முயற்சித்ததால் சார்பு ஆய்வாளர் செந்தில்குமார் அவர்கள் மேற்படி TVS Scooty யை வழிமறித்து அதில் வந்தவர்களை பிடித்து நிறுத்தினார். உடன் வந்த கருப்பு நிற பல்சரில் வந்தவர்கள் தப்பித்து செல்லும்போது தவறவிட்ட சாம்சங் செல்போன் , கருப்பு நிற பிலிப் கவர் ஒன்று , 2 டைரிகள், ஆகியவற்றை S.I குகனேஷ்வரன் என்னிடம் ஆஜர்செய்தார். பின்னர் மேற்படி ஆட்டோவில் முன்பக்கத்தில் அமர்ந்து இருந்த ஆட்டோ ஓட்டுனரை விசாரித்த போது அவர் தனது பெயர் அப்துல் ரகீம் என்று சொன்னார்.அதன் பின் ஆட்டோவில் பின்இருக்கையில் இருந்த

நபர்களை விசாரிக்க அவர்கள் அருள்தாஸ், கேசவன், அஜ்மல்கான் என விசாரணையில் தெரியவந்தது. அதில் அருள் தாஸ் என்பவர் வைத்திருந்த கருப்பபு கலர் பேக்கில் வெள்ளை நிற புள்ளி போடபட்டிருந்தது அதில் என்ன வைத்திருந்தீர்கள் என்று விசாரித்த போது மூவரும் முன்னுக்குபின் முரணாக பதில் அளித்தனர். அருள் தாஸை அவர்க வைத்திருந்த பேக்கை திறந்து காட்ட சொன்னோம்.அதில் சாம்பல் நிற அலுமினிய பையில் காக்கி கலர் டேப் சுற்றப்பட்ட சுமார் 4 கிலோ பொட்டலம் ஒன்றும் சுமார் 1 கிலோ எடையுள்ள வெள்ளை நிற பவுடர் கொண்ட டப்பா ஒன்றும் , அரைக்கிலோ எடையுள்ள பச்சை நிற கல் ஒன்றும் , சுமார் 30 கிராம் எடையுள்ள கருப்பு நிற கோந்து ஒன்று மஞ்சள் நிற மூடி போட்ட டப்பாவில் இருந்தது. சுமார் 50 கிரா்ம் எடையுள்ள கண்ணாடி போன்ற கற்கண்டு போன்ற பொருள் ஒன்று ஊதா நிற மூடி போட்ட டப்பாவில் இருந்தது.இது பற்றி ஆட்டோவில் இருப்பவரிடம் விசாரிக்க அவர்கள் முன்னுக்குபின் முரணாக பதில் சொல்லியதால் அவர்கள் அனைவரையும் ஆட்டோவில்இருந்து இறங்க சொல்லி ஆட்டோவை நோட்டமிட்டபோது மேற்படி ஆட்டோவில் பின் இருக்கைக்கு பின்னால் ஒரு கட்டைப்பை இருந்தது. அதனை அருள் தாஸ் என்பவரை எடுத்து காண்பிக்க சொன்னபோது அந்த கட்டப்பைக்குள் வெள்ளை நிற வலவலப்பான பிளாஸ்டிக் பையில் சிகப்பு ஆங்கில எழுத்துகளில் 1001 , Kabul – Afganistan– (South Asia) என்ற எழுத்திற்கு கீழே மொழி தெரியாத எழுத்துகளில் குறிப்பு எழுதபட்டிருந்தது. வெள்ளை கலர் பொடியை கொண்ட சுமார் 1/2 கிலோ எடை கொண்ட பிளாஸ்டிக் பையால் சுற்றபட்ட 6 பேக் இருந்தது. இவைகளை பற்றிவிசாரிக்க போது இவைகள் எல்லாம் மாவு பொருட்கள் என்றும் சித்த வைத்திய சாலைக்கு செல்வதாக கூறினார். அப்போது மேலும் இருசக்கர வாகனத்தில் வந்தவர்களை (TVS Scooty) பற்றி விசாரித்ததில் தேவகோட்டையை சேர்ந்த முத்து ராஜா மற்றும் சுரேஷ்குமார் ஆகியோர் என தெரிய வந்தது. அவர்களை விசாரித்தபோது எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றும் ஆட்டோவில் வந்தவர்கள் தான் எங்களை வர சொன்னார்கள் என்று கூறினார். சுரேஸ்குமார் கையில் வைத்திருந்த கட்டப்பையில் என்ன வைத்திருந்தார் என்று விசாரித்தபோது எடைபோடும் இயந்திரம் ஒன்றும் பாலித்தின் பைகளில் சீல் போடும் இயந்திரம் ஒன்றும் சிவப்பு கலர்

மூடிபோட்ட டப்பாவில் நீலநிற மாத்திரைகள் 3 எடுத்து காண்பித்தார். அப்போது அருள் தாஸிடம் அழுத்தம் கொடுத்து விசாரித்தபோது ஆட்டோவில் 9 பொட்டலங்களில் உள்ள பொருள் என்ன என்று கேட்டபோது Ambitamine என்ற போதைப்பொருள் என்று சொன்னார். கருப்பு கலர் வெள்ளை புள்ளிபோட்ட பேக்கில் 4 கிலோ எடையுள்ள பொருள் Methaclone என்றும் சொன்னார்.அரைக்கிலோ எடையுள்ள பச்சைநிற கல் ஹெராயின் என்றும், 30 கிராம் எடையுள்ள கருப்பு நிற கோந்து போன்ற பொருள் Opium என்றும் , 50 கிராம் எடையுள்ள கண்ணாடிபோன்ற கற்கண்டு வடிவிலான பொருள் Ice என்ற Methapetamine என்றும் கூறினார். மேற்படி ஆட்டோ ,ஆட்டோவில் இருந்த போதைப்பொருட்கள் சுரேஷ்குமார் வசம் இருந்த எடைபோடும் இயந்திரம் ஒன்றும் பாலித்தின் பைகளில் சீல் போடும் இயந்திரம் ஒன்றும் சிவப்பு கலர் மூடிபோட்ட டப்பாவில் நீலநிற மாத்திரைகள் 3 ,கருப்பு நிற பல்சரில் வந்தவர்கள் தப்பித்து செல்லும்போது தவறவிட்ட சாம்சங் செல்போன் , கருப்பு நிற பிலிப் கவர் ஒன்று , 2 டைரிகள்ஆகியவற்றை வெளிநபர்கள் யாரும் சாட்சியாக இருக்க முன் வராததால் அத்தாட்சியில் சாட்சிகளாக மு.நி.கா ராஜ்குமார், பாண்டியராஜன் ஆகியோர்களை சாட்சிகளாக நியமித்து அருள்தாஸிடமிருந்து அத்தாட்சியில் சாட்சிகள் முன்னிலையில் நேரம் 18.45 மணிக்கு கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.த.ச.ஆ 1** ஆக குறியீடு செய்யபடுகிறது. மேலும் அருள் தாஸை விசாரிக்கும்போது இந்த பொருள்களை வாங்குவதற்காக தான் 2 லட்சம் ரூபாய் முன்பணமாக பெற்ற தொண்டியை சேர்ந்த அஜ்மீர் கான் என்பவரிடம் Arasur அருகே Ford Icon கார் TN07AD2950 (Red Colour) காரில் அவர்கள் நின்று கொண்டிருப்பதாகவும் , அவர்களிடம் மேற்சொன்ன பொருள்களை தான் கொடுக்க கொண்டு சென்றதாகவும் கூறினார். நீல நிற 3 மாத்திரைகள் கைப்பற்றியது தொடர்பாக சுரேஷ்குமாரிடம் விசாரித்தபோது அவைகள் (MDMA) Molly போதை மாத்திரைகள் சொந்த பயன்பாட்டிற்காக அருள் தாஸிடம் வாங்கியதாக தெரிவித்தார். மேலும் விசாரணையில் முத்துராஜா , சுரேஷ்குமார் ஆகிய இருவரும் மேற்படி அருள்தாஸ் என்பவருக்கு உதவியாக இருந்து மேற்படி பொருள்களை விற்பனை செய்து கொடுத்தால் கூலியும் , லாபத்தில் 1 சதவீதம் பணம் தருவதாகவும் கூறினார்கள், பின்னர்

நான் எங்களது குழுவை சேர்ந்த சார்பு ஆய்வாளர் ஜேசுதாஸ் ,தங்கமுனியசாமி ,சதிஸ்குமார் ஆகியோர் குழுவிடம் நான் பிடித்து வைத்திருக்கும் ஆட்டோ மற்றும் போதைப்பொருள்கள் பற்றி தெரிவித்து அரசூரில் இதை வாங்குவதற்காக Ford TN07AD2950 (Red Colour) காரில் காத்திருப்பதாகவும் அவர்களை உடனே சென்று பிடிக்குமாறு கூறினேன். பின்னர் அருள்தாஸ் அவர்கள் கூறிய தகவலின் அடிப்படையில் Arasoor பகுதியில் Ford TN07AD2950 (Red Colour) காரில் இருக்கும் அபுல் கலாம் ஆசாத் , அஜ்மீர் கான் , மற்றும் ஒரு நபரை பிடிக்க இன்னொரு குழுவான தங்க முனியசாமி சார்பு ஆய்வாளரிடம் தகவல் கூறி பிடிக்க சொன்னேன்.S.I ஜேசுதாஸ் அந்த காரை பிடித்து விசாரணை செய்ததில் காரில் இருப்பவர்கள் அபுல் கலாம் ஆசாத் , அஜ்மீர் கான் , அப்துல் வகாப் என்றும் தெரிவித்தார். அந்த காரில் இருந்த மஞ்சள் துணைப்பையில் சுமார் 30 கிராம் எடை கொண்ட பாலித்தின் பை சுற்றப்பட்ட Ambitamine என்றும் மற்றொரு பாலித்தீன் பையில் இருந்தது Methaclone என்றும் காரில் இருந்த அபுல்கலாம் ஆசாத் கூறியதாக S.I ஜேசுதாஸ் எனக்கு தகவல் சொன்னார். நான் உடனே நான் கைப்பற்றிய ஆட்டோ , போதைப்பொருள்கள் எதிரிகள் சார்பு ஆய்வாளர்கள் திபாகர், செந்தில்குமார் ,குகனேஷ்வரன் வசம் ஒப்படைத்துவிட்டு எனது குழுவினருடன் அரசூர் சென்று அங்கு பிடித்து வைக்கபட்டிருந்த அபுல் கலாம் ஆசாத் , அஜ்மீர் கான் , அப்துல் வகாப் ஆகிய மூவரையும் விசாரித்த போது அவர்கள் காரில் வைத்திருந்த சுமார் 30 கிராம் எடை கொண்ட பாலித்தின் பை சுற்றப்பட்ட Ambitamine மற்றொரு பாலித்தீன் பையில் இருந்தது Methaclone ஆகியவை ஏற்கனவே அருள் தாஸிடமிருந்து பரிசோதனைக்காக வாங்கி வைத்திருந்தது என்றும் மேலும் விசாரணையில் அருள்தாஸ் என்பவர் சென்னையை சேர்ந்த நிஜார் அலியிடம் சுமார் 1 1/2 டன் அளவுள்ள 36 செம்மரக்கட்டைகளை தொண்டியை சேர்ந்த அஜ்மீர் கான் என்பவர் மூலமாக அவரது Boat ல் இலங்கை நாட்டிற்க்கு செம்மர கட்டைகளுடன் போதைப்பொருட்களையும் சேர்த்து கடத்த உள்ளதாக கூறினார்.நான் அத்தாட்சி தயார் செய்து Ford TN07AD2950 (Red Colour), கார், Ambitamine Methaclone ஆகியவற்றை போலீஸ்சாட்சிகளான ராஜ்குமார் மற்றும் பாண்டியராஜன் ,முன்னிலையில் அபுல் கலாம் ஆசாத்திடம் இருந்து

21.00மணிக்கு கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.த.ச.ஆ 2** ஆகும். மேற்படி தகவல்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் தெரிவித்து , பின்னர் திருவாடனை காவல் துணை கண்காணிப்பாளர் புகழேந்தி கணேஷ் என்பவருக்கு தெரிவித்தேன். அவர் உடனே சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்.அவரிடம் நடந்த சம்பவம் குறித்து விளக்கமாக எடுத்து கூறினேன். பின்னர் சார்பு ஆய்வாளர் குழுவுடன் நான் அத்தாட்சியில் கைப்பற்றிய வழக்கு சொத்துகள் , வாகனங்கள் எதிரிகள் அனைவரையும் திருவாடனை காவல்நிலையம் கொண்டு சென்று மனித உடல் நலத்திற்கும் மன நலத்திற்கும் கேடு விளைவிக்கும் போதைப்பொருட்களை கடத்தியதற்காகவும் நடவடிக்கை எடுக்குமாறு 23.00 மணிக்கு திருவாடனை காவல் கண்காணிப்பாளர் புகழேந்தி கணேஷ் என்பவரிடம் புகார் அளித்தேன். நான் அளித்த புகார் **அ.த.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யபடுகிறது. இது சம்மந்தமாக திருவாடனை காவல் கண்காணிப்பாளர் புகழேந்தி கணேஷ் மற்றும் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

இல்லை

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.